# பங்காளதேஷின் ஜனநாயக நெருக்கடி

எம்.அப்துல் ஜப்பார்[1]
எம்.ஏ.எம். பௌசர்[2]
[1,2]இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

பங்காளதேஷ் அதனது சுதந்திரத்திலிருந்து நான்கு தசாப்தங்களைக் கடந்துள்ள போதிலும் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திப் பரப்புக்களில் அதனது அடைவுகள் குறிப்பிடத்தக்களவு இல்லை. அந்நாட்டின் ஒவ்வொரு அரசியற் தலைவரும் ஜனநாயகம் பற்றி சுவாரஸ்யமாகப் பேசியிருக்கின்றார். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் தோல்வி கண்டனர். வாக்களிப்பின் மூலம் அதிகாரத்திற்கு வந்தகட்சிகள் கூட ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு தவறியுள்ளன. இராணுவச் சதிப்புரட்சியின் மூலம் அதிகாரத்தினைக் கைப்பற்றிய தலைவர்கள் தமக்கே உரித்தான ஜனநாயக மாதிரியினை அறிமுகம் செய்வதில் கவனம் செலுத்தியிருந்தனர். அதேவேளை வளர்ச்சியடையாத அரசியல் கலாசாரம், வறுமை, போதிய எழுத்தறிவின்மை என்பவற்றைக் கொண்ட பங்காளதேஷ் சமூகம் ஜனநாயகத்தின் விருத்திற்கு தேவையான அம்சங்களை வழங்குவதிலிருந்தும் தூர விலகி நிற்கின்றது. எனினும் அரசியல் ரீதியாக வளர்ச்சியுற்ற, பொருளாதார ரீதியாக செழுமையடைந்த ஓர் அரசினை அமைப்பதற்கான ஆவல் அந்நாட்டு மக்களிடம் இல்லாமல் இல்லை. அங்குள்ள இரு கட்சிகளை நோக்கிய மக்களின் அணி திரள்வு, அரசியல்வாதிகளின் யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ள முனையும் அண்மைய போக்குகள், தேர்தலைத்தவிர அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான வேறு மார்க்கங்களில் மக்கள் நம்பிக்கையற்றுச் செயற்படும் நிலை என்பன ஜனநாயக விருத்திற்கான வாய்ப்பினை பங்காளதேஷில் இயலுமானதாக்கியுள்ளன.

**பிரதான சொற்கள்:** அரசியலமைப்புவாதம், அரசியல் கலாசாரம், இராணுவமயமாக்கம், ஜனநாயகம்

## அறிமுகம்

பங்காளதேஷ் அதனது சுதந்திரத்திலிருந்து சுமார் 30 வருடங்களைக் கடந்துள்ள போதிலும் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்திப் பரப்புக்களில் அதனது அடைவுகள் என்பது குறிப்பிடத்தக்களவு இல்லை. பங்காளதேசின் ஒவ்வொரு அரசியற் தலைவரும் ஜனநாயகம் பற்றிச் சுவாரஸ்யமாகப் பேசியுள்ள போதிலும் அதனை நடைமுறைப் படுத்துவதில் அவர்கள் ஒவ்வொருவரும் தோல்வி கண்டிருக்கின்றனர். வாக்களிப்பின் மூலம் அதிகாரத்திற்கு வந்த கட்சிகள் கூட ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு தவறியுள்ளது. இராணுவச் சதிப்புரட்சியின் மூலம் அதிகாரத்தினைக் கைப்பற்றிய தலைவர்கள் தமக்கே உரித்தான ஜனநாயக மாதிரியினை அறிமுகம் செய்வதிலேயே கவனம் செலுத்தியிருந்தனர். இந்தவகையில் பங்காளதேஷ் ஜனநாயகத்தின் விருத்தியில் பல்வேறு பிரச்சினைகள் அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. வளர்ச்சியடையாத அரசியல் கலாசாரம், வறுமை, போதிய எழுத்தறிவின்மை என்பவற்றைக் கொண்ட பங்காளதேஷ் சமூகம் ஜனநாயகத்தின் விருத்திற்கு தேவையான அம்சங்களை வழங்குவதிலிருந்தும் தூர நிற்கின்றது. எனினும் அரசியல் ரீதியாக வளர்ச்சியுற்ற, பொருளாதார ரீதியாக செழுமையடைந்த ஒரு அரசினை அமைப்பதற்கான ஆவல் பங்காளதேஷ் மக்களிடம் இல்லாமல் இல்லை. அங்குள்ள இரு கட்சிகளை நோக்கிய மக்களின் அணி திரள்வு, அரசியல்வாதிகளின் யதார்த்தத்தினைப் புரிந்துகொள்ள முனையும் அண்மைய போக்குகள், தேர்தலைத் தவிர அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கான வேறு மார்க்கங்களில் மக்கள் நம்பிக்கையற்றுச் செயற்படும் நிலை என்பன ஜனநாயக விருத்திற்கான வாய்ப்பினை பங்காளதேஷில் இயலுமானதாக்கியுள்ளது.

## பங்காளதேஷில் ஜனநாயகம்

ஏனைய மூன்றாம் உலக நாடுகளைப் போன்று பங்காளதேசும் அதனது வளர்ச்சியில் இரட்டைச் சவால்களை எதிர்கொள்கின்றது. ஜனநாயக ஒழுங்கினை நிறுவனமயப்படுத்தும் அதேநேரம் அபிவிருத்திற்கான பொருளாதார வளர்ச்சி வீத இலக்கினை அடைவதுமே அவ்விரு சவால்களுமாகும். இதன்படி பங்காளதேஷில் ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும் சமாந்தரமான முறையில் விருத்தி செய்யப்பட வேண்டியிருக்கின்றது. வறுமைக் கோட்டிற்குக் கீழான மக்களைக் கொண்டிருத்தல், குறைந்தளவான எழுத்தறிவு வீதம், பட்டினி,

நோய் மற்றும் போசாக்கின்மை என்பன மேற்கூறிய சவால்களை வெற்றிகொள்வதற்கு எந்தவொரு அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை இழிவலாக்கிவிடும். இதுவே பங்காளதேஷின் தற்போதய நிலையாக உள்ளது. பங்காளதேஷின் 80% மக்கள் இந்நிலையிலிருப்பதனால் அது பங்காளதேசின் ஜனநாயக மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பரம்பலில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

1971 இல் பங்காளதேஷ் சுதந்திர மடைந்ததிலிருந்து இன்றுவரை அதனது ஜனநாயகம் சிக்கலுக்குள்ளாகியே வந்துள்ளது. கிழக்குப் பாகிஸ்தானிய பெரும்பான்மை மக்களின் சுயநிர்ணய உரிமையினை அடைவதனை நோக்காகக் கொண்ட ஒரு நீண்ட ஜனநாயக இயக்கத்தின் செயற்பாட்டுத் தொடர்ச்சியிலேயே பங்காளதேஷ் உதயமானது. இவ்வியக்கத்தின் தோல்வி சுய நிர்ணய உரிமைக்கான வங்காளியர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு வழிவிட்டது. சுதந்திர பங்காளதேசத்தின் 1972 ஆம் ஆண்டைய அரசியல் திட்டம் மக்களின் ஜனநாயக உரிமைகளை அங்கீகரித்தது. எனினும் குறைந்தது இரண்டு ஆண்டுகளின் பின்னரே முதலாவது பாராளுமன்றம் தேர்ந்தெடுக்கப் பட்டது. இதன் மூலம் அடிப்படைச் சட்டத்தின் அமைப்பு, தன்மை என்பன மாற்றப்பட்டதுடன் நாட்டின் அரசியல் முறைமையானது ஒரு கட்சியின் தனியுடமை கட்டமைப்பினை நோக்கி நகர்த்தப்பட்டது. இந்நிகழ்வுத் தொடரில் சகல அரசியல் கட்சிகளும் கலைக்கப்பட்டதுடன் அரசுக்குச் சார்பான நான்கு பத்திரிகைகளைத் தவிர மற்ற எல்லாப் பத்திரிகைகளும் தடை செய்யப்பட்டது. அடிப்படை உரிமைகள் இடைநிறுத்தப்பட்டு நீதித்துறை அரசின் நிறைவேற்றுக் கிளையின் உப பணியாளர் முகவராக மாற்றப்பட்டது (Ahmed, 1994).

பங்காளதேஷ் அரசியலில் தொடர்ச்சியாக இராணுவம் தலையிட்டதனை அடுத்து ஜனநாயக நெருக்கடியானது மேலும் ஆழமாக்கப்பட்டது. சியா மற்றும் இர்சார்ட் ஆகிய இராணுவத் தலைவர்களின் ஆட்சியில் பங்காளதேஷ் ஜனநாயகத்தின் உருகுநிலையினை அவதானிக்க முடிந்தது. இக்கால கட்டங்களிலெல்லாம் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சக்திகளும் பங்காளதேஷின் ஜனநாயகத்தினைச் செயற்படுத்த விளைந்திருந்தது. எனினும் பங்காளதேஷின் அரசியல் இயங்குநிலைப் போக்கில் சிவில் மற்றும் இராணுவம் ஆகிய இரு வகையிலான தலைமைகளும் ஜனநாயக நெருக்கடிகளையே உருவாக்கியிருந்தது மட்டுமல்லாது சட்டத்தினை வடிவமைக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் மற்றும் அவர்களது சொந்த நோக்கிலான ஜனநாயக நிறுவனங்களை உருவாக்க எடுத்த முயற்சிகள், ஜனநாயக நிறுவனங்களின் வளர்ச்சிக்கான அவசியத் தேவையினை கருத்திற் கொள்ளாமை என்பன நிலமையினை இன்னும் மோசமாக்கியன. மேலும் இத்தலைமைகள் பங்காளதேஷின் பொருளாதார வளர்ச்சியினைத் துரிதப் படுத்துவதற்கு தேவையான அர்ப்பணிப்பினை வழங்குவதிலும் தோல்வி கண்டனர். நீண்டகால இராணுவ ஆட்சியில் (1976 – 1990) அரசியல் திட்ட ஆட்சியினை மேம்படுத்துவதற்கான முக்கிய மையமாக விளங்கும் ஜனநாயக அரசியல் நிறுவனங்கள் அதிகளவு சேதப்படுத்தப்பட்டன. இதன் மூலம் நாட்டில் சுதந்திர அரசியல் கட்சிகளின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப் பட்டிருந்தது.

தொடர்ந் தேர்ச்சியாக அரசியல் செயற் பாட்டாளர்கள் தடைசெய்யப் பட்டதிலிருந்து மிகவும் பிரபலமான கட்சிகளுக்குள்ளிருந்த பலமும் சுதந்திர தெரிவுத் தன்மையும் அழிக்கப்பட்டன. மறுபுறத்தில் இராணுவ ஆட்சியாளர்கள் தாம் நடத்திய தேர்தல்களுக்கு ஜனநாயக வடிவம் கொடுப்பதற்கு பணபலத்தினால் ஏதேனும் கருத்தியல் அல்லது வேலைத்திட்டங்கள் இல்லாமல் மழை காலத்தில உதயமாகும் காளான்கள் போன்று அரசியல் கட்சிகள் தோற்றுவிக்கப்பட்டன. எனினும் இராணுவம் அதன் ஆதரவினை மீழப் பெற்றுக் கொண்டதிலிருந்து இர்சார்டின் இராணுவ ஆட்சி முடிவிற்கு வந்தது (Halim, 1998).

இவ்வாறாக 1990 களில் பங்காளதேஷ் இராணுவ ஆட்சியின் பிடிக்குள் இருந்து விடுவிக்கப்பட்டது. ஜனநாயகத்திற்கான மக்களின் தொடர்ச்சியான போராட்டம் ஜனாதிபதி இர்சார்டின் ஆட்சிற்கு முடிவினைப் பெற்றுக் கொடுத்தது. இதன் மூலம் பங்காளதேஷ் தேசம் ஜனநாயகம், அரசியலமைப்புவாதம் என்பவற்றினை நோக்கிய புதிய பயணத்தினை ஆரம்பித்தது. பங்காளதேஷ் அரசியல் திட்டவாதத்தின் இரண்டாவது ஆரம்பம் பதில் ஜனாதிபதி நீதிபதி சஹாபுத்தீன் அஹமத்தின் கீழ் இடம்பெற்ற ஐந்தாவது பாராளுமன்றத் தேர்தல் மூலம் ஏற்பட்டது. இத்தேர்தல் பங்காளதேஷின் ஜனநாயக சமாதானவழி உருமாற்றத்தினைக் குறித்து நின்றது. அதாவது இத்தேர்தலின் பின்னர் அமைக்கப்பட்ட பாராளுமன்றம் அரசியல்

திட்டத்திற்குட்பட்ட அரசாங்கத்தினை அமைப் பதற்கான அரசியலமைப்புக்கான 12வது திருத்தத்தினைக் கொண்டு வந்தது. இதன் மூலம் 16 வருடங்களின் பின்னர் மீண்டும் ஜனநாயகம் பங்காளதேசத்தில் மீழ நிலை நிறுத்தப்பட்டது. இரண்டாவது பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஆரம்பம் சிறப்பாகவும் உணர்ச்சி பூர்வமிக்கதாகவும் காணப்பட்ட போதிலும் இப்பாராளு மன்றமும் ஜனநாயகத்திற்கான அதனது தொடர்ச்சியில் தோல்வியினைத் தழுவ வேண்டி ஏற்பட்டது. அதாவது இப்பாராளுமன்றம் அதனது அரசியல் கால எல்லை முடிவடைவதற்குள் கலைக்கப்பட்டது என்பதாகும். இக்கலைப்புக்குப் பிரதான காரணம் எதிர்த்தரப்புக்களின் தொடர்ச்சியான அழுத்தங்களாகும். அதன்போது ஆட்சியிலிருந்த பங்காளதேஷ் தேசியவாதக் கட்சியும் அரசியல் திட்டவாதத்தினதும் ஜனநாயகத்தினதும் அபிவிருத்தியினை நோக்கிய நேர்நிலையான முயற்சியினை எடுப்பதில் தோல்வி கண்டிருந்தது.

ஐந்தாவது பாராளுமன்றத்தினைப் பொறுத் தவரையில் அப்பாராளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக அவாமி லீக் காணப்பட்டதுடன் இக்கட்சிக்கு பாராளுமன்றத்தில் அவர்களது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான போதுமான நேரம் கொடுக்கப்படவில்லை. இதன்விளைவாக அக்கட்சி பாராளுமன்றத்தினைப் பகிஷ்கரித்தது. இதன் போது ஆளும் தரப்பு எதிர்த் தரப்பினைப் பாராளுமன்றத்தில் கொண்டுவருவது அவசியம் என்ற விடயத்தில் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை. ஆளும் தரப்பினர் எதிர்த் தரப்பின்றி இரண்டு வருட காலங்களுக்கு பாராளுமன்றத்தினை பலவந்தமாக நடத்திச் சென்றனர். இறுதியில் பங்காளதேஷ் தேசியவாதக் கட்சி அரசாங்கம் ஆறாவது பாராளுமன்றத் தேர்தலினை நடாத்துவதற்கு மறுத்ததுடன் பிரதான எதிர்த்தரப்பினைப் புறக்கணித்து சில சிறு கட்சிகளுடன் தேர்தலில் போட்டியிடவும் விருப்பம் காட்டியது. இவ்விடயம் பங்காளதேஷ் இராணுவ சர்வாதிகாரியான இர்சார்ட் தொடர்ச்சியாக மேற்கொண்ட செயல்களுக்கு ஒப்பாக இருந்தது. இது ஜனநாயகரீதியான தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் மிகவும் தவறான ஒரு செயலாகக் கொள்ளப்பட்டதுடன் ஆளும் தரப்பு பங்காளதேஷ் ஜனநாயக அரசியலை மூடிவிட்டிருந்தது என்பதையும் வெளிப்படுத்தியிருந்தது. ஆளும் தரப்பின் ஜனநாயக விரோத செயல்களினாலேயே பங்காளதேஷின் ஆறாவது பாராளுமன்றம் 7 நாள் ஆயுட்காலத்தினை மட்டும் கொண்டிருந்தது.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் எதிர் மறையான இப்போக்கு பங்காளதேஷ் ஜனநாயகத்தில் தலைமைத்துவ கட்டுமான நெருக்கடியினை வெளிப்படுத்தி நின்றது. அதாவது ஜனநாயகத்தினை நோக்கிய உறுதியான தலைமைத்துவத்தினை ஏற்படுத்துவதில் பங்காளதேஷ் நெருக்கடிகளை எதிர்கொண்டது என்பதாகும் (Halim, 1998). இதன்பிற்பாடு ஏழாவது பாராளுமன்றம் சில நம்பிக்கைகளுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் நடுநிலையான காபந்து அரசாங்கத்தின் கீழ் நடாத்தப்பட்டது. எனினும் இத்தேர்தல் மூலம் அரசாங்கத்தினைப் பொறுப்பேற்றுக் கொண்ட அவாமி லீக்கும் முன்னைய பங்காளதேஷ் தேசியவாதக் கட்சி மேற்கொண்ட அதே ஜனநாயக விரோதச் செயற்பாட்டினையே தொடர்ந்தும் மேற்கொண்டது. அதாவது அவாமி லீக்கும் எதிர்க்கட்சி பங்குபற்றலின்றிய ஒரு ஆட்சியினையே கொண்டு நடாத்தியது. எடுத்துக்காட்டாக இவ்வரசாங்கத்தின் சட்டவாக்க அதிகாரம் முன்னைய அரசாங்கத்தின் வழியிலேயே பயன்படுத்தப்பட்டதுடன் வாரத்தில் இரு விடுமுறை நாட்களை அறிவித்தல், சுதந்திரப் போராளிகளின் குடும்பங்களுக்கு பொதுச் சேவையில் 30% கோட்டாவினை வழங்குதல் முதலிய விடயங்கள் பாராளுமன்றத்தில் மக்கள் ஒன்று கூடல் இன்மை மற்றும் ஊடகத் தவிர்ப்புச் செய்யப்பட்ட நிலையிலேயே பிரகடணப்படுத்தப்பட்டது.

பாராளுமன்ற அமர்வுகளும் மிகக் குறுகிய காலத்திற்கே நடாத்தப்பட்டது. எதிர்க் கட்சியான பங்காளதேஷ் தேசியவாதக் கட்சி பாராளு மன்றத்தினைப் பகிஷ்கரித்ததுடன் பிரதம மந்திரி சேக் ஹசீனா எதிர்க்கட்சியின் இப்போக்கினை தூண்டிக் கொண்டிருந்தார். இதன் போது வானொலி போன்ற முக்கியமான வெகுஜன ஊடகங்கள் அரசாங்கத்தின் குரலாகவே பயன் படுத்தப்பட்டன. நிறைவேற்றுத் துறையிலிருந்து நீதித் துறையினைப் பிரித் தெடுப்பதற்கான வாக்குறுதிகள் வழங்கப் பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் நீதித்துறை நிறைவேற்றுத் துறையின் கரங்களிலேயே தொங்க விடப்பட்டது. நீதித் துறையினை நிறைவேற்றுத் துறையிலிருந்து விடுவிப்பதாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்றுவரை அமுல் படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவாமி லீக் அரசாங்கத்தின் ஐந்து வருட கால பதவிக் காலம் முடிவுற்றதன் பிற்பாடு நீதிபதி

லத்தீபுர் ரஹ்மான் தலைமையிலான காபந்து அரசாங்கத்தின் கீழ் எட்டவாது பாராளுமன்றத் தேர்தல் 2001 ஒக்டோபர் 1 இல் நடாத்தப்பட்டது. இத்தேர்தலினை அடுத்து பங்காளதேஷ் தேசியவாதக் கட்சி கூட்டரசாங்கம் ஒன்றினை ஏற்படுத்தியது. இவ்வரசாங்கம் அமைக்கப்பட்டதன் பிற்பாடு அவர்கள் ஜனநாயகக் கலாச்சாரத்தினை அமுல் படுத்துவதற்கு முயற்சித்தனர். எனினும் இது விடயத்தில் குறைந்தளவிலான வெற்றியினையே இவ்வரசாங்கம் அடைந்து கொண்டது. இவ்வராலாற்றுப் பின்னணியில் பங்காளதேஷ் ஜனநாயகத்தில் காணப்படும் பிரத்தியேகமான பண்புகளை பின்வரும் தலைப்பின் கீழ் காணலாம்.

**ஜனநாயகத்தின் பிரத்தியேகப் பண்புகள்**

பங்காளதேஷ் ஜனநாயகத்தினைத் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு அந்நாட்டின் தற்போதய நிலையினைப் புரிந்துகொள்வது அவசியமாகும். இதன்படி பங்காளதேஷ் ஜனநாயகத்தில் காணப்படுகின்ற சில முக்கியமானதும் குறிப்பிடத் தக்கதுமான அம்சங்களைப் பின்வருமாறு காணலாம்.

**i) ஜனநாயகக் கலாச்சாரம் இல்லாமை**

பங்காளதேசத்தில் ஜனநாயக அரசியல் கலாச்சாரம் இல்லை. ஜனநாயக அடிப்படைகளும் நடைமுறைகளும் பங்காளதேஷ் சமூகத்தில் பிரதான இடத்தில் வைத்துப் பார்க்கப்படுவதில்லை. ஜனநாயக நெறிமுறைகள் பெறுமானங்களைக் கொண்டு மக்கள் போட்டியிடுவதற்கான சமத்துவ நிலை பங்காளதேசத்தில் இல்லை. இந்நாட்டின் கல்வி மற்றும் அரசியல் நிறுவனங்களில் ஜனநாயகக் கற்றலுக்கான வாய்ப்புக்களும் கிடைக்கக் கூடியதாக இல்லை. இவ்வாறாக பங்காளதேஷ் சமூகத்திலும் அரசியலிலும் ஜனநாயக நெறிமுறைகளும் பெறுமானங்களும் வேர்கொள்ளவில்லை எனலாம்.

**ii)சட்டவாட்சி நடைமுறையிலில்லாமை**

ஜனநாயகத்தின் இருப்பிற்கு காலாக இருக்கும் சட்டவாட்சி இங்கு நடைமுறையில் காணப் படுவதில்லை. இது இந்நாட்டின் அரசியல் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. இங்கு பொலிஸ் படையினர் குற்ற வாளிகளையன்றி எதிர்த்தரப்பினருக்கு எதிராகவே நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். நீதித்துறை என்பது மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் காவலனாக அன்றி அரசாங்க நிறைவேற்றுக் கரத்தின் தீர்ப்பு மன்றமாகவும் உள்ளது.

**iii)அரசியல் ஒழுக்கமின்மை**

பங்காளதேஷ் அரசியல்வாதிகளிடத்தில் அரசியல் ஒழுக்கம் குறைந்த மட்டத்திலேயே நிலவுகின்றது. தேசிய தேர்தலினை நடத்துவதற்கான அரசாங்கத்திற்குப் பதிலாக காபந்து அரசாங்கத்தினை அமைப்பதற்கான விசேட சட்ட விதிகளைக் கொண்டிருப்பது இதனைப் நன்கு புலப்படுத்துகின்றது. அதாவது இது அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையற்ற தன்மையினையே வெளிப்படுத்துகின்றது. எனினும் ஜனநாயகரீதியான அரசாங்க அமைவு தொடர்பில் காபந்து அரசாங்க முறையானது பங்களிப்புச் செய்யக் கூடும்.

**iv)பலமான சிவில் சமூகம் இல்லாமை**

பங்காளதேஷ் பலமான சிவில் சமூகத்தினை ஏற்படுத்துவதில் தோல்வி கண்டுள்ளது. குடிமைக் கலாச்சாரத்தினை ஏற்படுத்துவதில் கூட இந்நாடு இன்னும் வெற்றியடையவில்லை. தொடர்ந் தேர்ச்சியான ஜனநாயகத்திற்கு முரணான ஆட்சி பலமான சிவில் சமூகத்தின் இருப்பினை பலவீனப் படுத்தியுள்ளது.

**v)பலமான அரசியல் தலைமைத்துவமின்மை**

பங்காளதேஷ் தேசப்பற்றுள்ள ஒரு பலமான அரசியல் தலைமைத்துவம் இல்லாமல் உள்ளது. இத்தேசத்தினை பல வழிகளிலும் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு பலம்வாய்ந்த அரசியல் தலைமைத்துவம் இன்றியமையாததாகும். ஒரே வழியில் தேசிய ஐக்கியத்தினை வெளிப்படுத்தும் அரசியல் தலைமைத்துவத்தினை பங்காளதேஷ் தற்சமயம் கொண்டிருப்பதில்லை. ஏனெனில் இருக்கின்ற தலைவர்கள் அவர்களின் கட்சியின் தலைவர்களாக தங்களைக் கருதுகின்றார்களே தவிர ஒட்டுமொத்த தேசத்தின் தலைவராக தம்மைக் கருதுவதில்லை.

**vi) முரண்பாட்டுத் தன்மைவாய்ந்த அரசியல்**

பங்காளதேசின் அரசியலானது அதனது தன்மையில் முரண்பாட்டுத் தன்மை வாய்ந்ததாகும். இதன்படி பங்காளதேஷ் அரசியலில் ஒத்துழைப்பு, நம்பிக்கை, ஒற்றுமை என்பன காணப்படுவதில்லை. தேசியப் பிரச்சினை குறித்த விடயத்திலும் அரசியல் கட்சிகள் மத்தியிலும் கருத்தொருமைப்பாடற்ற தன்மையே காணப்படுகின்றது. ஒவ்வொரு தரப்பும் தேசிய நலன்களுக்காகவன்றி தமது சொந்த

நலன்களுக்காகவே தமது எதிர்ப்பினை வெளியிடுகின்றனர்.

**vii)செயற்றிறனற்ற அரசியல் நிறுவனங்கள்**

ஜனநாயகமயப்படுத்தல் மற்றும் அரசியல் அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்குத் தேவையான பலமான வளர்ச்சியடைந்த அரசியல் நிறுவனங்கள் பங்காளதேசில் இல்லை. எதிர்க் கட்சிகளின் தொடர்ச்சியான பகிஷ்கரிப்பினால் பங்காளதேஷின் ஜனநாயகம் வெற்றிகரமாகச் செயற்படத் தவறியுள்ளது. இந்நாட்டின் அரசியல் கட்சிகளும் அவர்களது சொந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான அமைப்புக்களாகவே காணப்படுகின்றன. ஜனநாயகத்தினை நிறுவனமயப் படுத்துவதற்கான அவற்றின் பங்கு என்பது போதியளவிலானதாக இல்லை என்பதுடன் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இல்லை.

**viii) ஊழலும் பயங்கரவாதமும்**

பங்காளதேஷின் ஜனநாயக அபிவிருத்தியில் இரு முக்கிய தடைகளாக இருப்பது ஊழலும் பயங்கரவாதமும் ஆகும். உலகின் பிரதான ஊழல்மிக்க நாடுகளுள் ஒன்றாக பங்காளதேஷ் அழைக்கப்படுவதனை பங்காளதேஷின் அரசாங்கங்கள் நிராகரித்து வந்துள்ள போதிலும் Transparency International என்ற அமைப்பு நான்கு தடவைகள் உலகின் பிரதான ஊழல்மிக்க நாடுகளுள் ஒன்றாக பங்காளதேஷினைக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறே பயங்கரவாதமும் பல்வேறு வடிவங்களில் இந்நாட்டின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

**ix) இரட்டைவேடப் போக்கு**

பங்காளதேஷ் ஜனநாயகத்திற்குள்ள மிகப் பெரிய தடைகளுள் ஒன்று எதிர்மறைத் தன்மை அல்லது இரட்டைவேடப் போக்காகும். இது மற்றவர்களை அங்கீகரிப்பதைத் தடுக்கின்றது. இதன்படி ஒருவருடைய நலன்களுக்கு ஆதரவாக இருந்தால் அது சரியானது மற்றும்படி அது தவறானதாகும். உதாரணமாக தேர்தல் முடிவுகள் ஒரு கட்சிக்கு ஆதரவாக இருந்தால் அக்கட்சி அத்தேர்தலினை முறையான தேர்தல் என அறிவிப்பதுடன் தமக்குச் சார்பாக இல்லாவிட்டால் அத்தேர்தலினை முறையற்றவை என அறிவிப்புச் செய்துவிடுகின்றன. இவ்வகையான தன்மை பங்காளதேஷ் அரசியலில் காணப்படுகின்றமையானது அந்நாட்டு மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் மீதான அவநம்பிக்கையினை ஏற்படுத்தியுள்ளது.

**x)சகிப்புத் தன்மையின்மை**

பங்காளதேஷ் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகள் மத்தியில் காணப்படும் நம்பிக்கையற்ற தன்மை, பரஸ்பர மரியாதையின்மை மற்றும் சகித்துக் கொள்ளாமை என்பன அந்நாட்டின் ஜனநாய கத்தினைப் பாதிப்புறச் செய்துள்ளது. இதன்படி உடன்பாடுகளும் இணக்கப்பாடுகளும் பங்காளதேஷ் அரசியலில் இல்லை எனலாம்.

**பங்காளதேசில் ஜனநாயகத்திற்கான வாய்ப்புக்கள்**

பங்காளதேசில் ஜனநாயகத்தினை நடைமுறைப் படுத்துவதில் பல்வேறு தடைகளும் சவால்களும் காணப்படுகின்ற போதிலும் அந்நாட்டில் ஜனநாயகத்தினை நிலை கொள்ளச் செய்வதற்கான பல வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

**மக்களின் ஓரினத் தன்மை**

சிட்டகொங்கில் வாழும் சில சிறுபான்மை யினர்களைத் தவிர பங்காளதேஷ் சமூகம் அதனது தோற்றம், சமூக – பொருளதார மற்றும் அரசியல் நம்பிக்கை தொடர்பில் ஓரினத் தன்மையுடையதாகும். கிட்டத்தட்ட சகல பங்காளதேச மக்களும் வங்காளிய இனத்திலிருந்து தோற்றம் பெற்றவர்களாவர். அத்துடன் இந்நாட்டின் 85 சதவீதமான மக்கள் முஸ்லீம்கள் ஆவர். சமூகத்தின் இவ்வோரினத் தன்மை ஜனநாயக விருத்திற்கான ஒரு நல்ல சமிக்ஞையாகவுள்ளது.

**2. காபந்து அரசாங்கத்திற்கான விதிகளைக் கொண்டிருத்தல்**

குறித்த அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவுற்றதன் பிற்பாடு அல்லது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அரசாங்கம் பதவி கவிழ்க்கப்படும் சந்தர்ப்பங்களில் தேர்தல்களினை நடாத்துவதற்கென காபந்து அரசாங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய காபந்து அரசாங்கத்தின் கீழ் புதிய தேர்தல்கள் நடாத்தப்படுவதானது தேர்தல்கள் மீதான மக்களின், அரசியல்வாதிகளின் நம்பிக்கையினை அதிகரிக்கச் செய்வதுடன் தேர்தல்கள் ஒழுங்காவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதற்கும் வழிவகை செய்கின்றது.

**3. ஜனநாயகத்திற்கான மக்களின் ஆர்வம்**

வாக்களிப்பு நிலையங்களில் வாக்காளர்களின் பிரசன்னம், தேர்தல்கள், அரசியல் குறித்த அவர்களது ஆர்வம் மற்றும் அரசாங்கத்தின்

ஜனநாயக விரோதச் செயல்களுக்கு மக்கள் காட்டும் எதிர்ப்பு என்பன ஜனநாயகத்தின் மீதான பங்காளதேஷ் மக்களின் ஆர்வத்தினை வெளிப்படுத்துகின்றது. 1996, 2001 இல் இடம்பெற்ற தேர்தல்கள் மக்களின் ஜனநாயகத்தின் மீதான ஆர்வத்தினை மேலும் நிரூபிக்கின்றது. இது இன்று நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**4. சமாதான வழிமுறையிலான அதிகார மாற்றம்**

குறித்த அரசாங்கத்தின் ஐந்து வருட பதவிக்காலம் முடிவடைந்ததன் பிற்பாடு காபந்து அரசாங்கத்தின் தலைமையில் தேர்தல் நடாத்தப் படுவதுடன் அதிகாரம் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு இடமாற்றப் படுகின்றது. இவ்வாறு அதிகாரம் சமாதான வழியில் காபந்து அரசாங்கத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு இடமாற்றப் படுகின்றமையானது பங்காளதேஷ் ஜனநாயகத்திற்கான மற்றுமொரு வாய்ப்பாகும்.

**5. கட்சிகளை நோக்கிய அணிதிரள்வு**

பங்காளதேஷில் பல கட்சிகள் காணப்படுகின்ற போதிலும் தேர்தல் முடிவுகள் இரு கட்சிகளை நோக்கிய மக்களின் நகர்வினை வெளிப்படுத்துகின்றது. இதனால் பங்காளதேஷ் கட்சி முறையானது இரு கட்சி முறையை நோக்கி நகர்ந்து செல்கின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது.

**6. சிவில் சமூகத்தின் பதிலீடு**

தற்பொழுது ஜனநாயகம் மற்றும் ஆட்சிச் செயன்முறையின் பல்வேறு விடயங்கள் குறித்து சிவில் சமூக அமைப்புக்கள் கரிசணையுடன் செயற்படுகின்றன. எனினும் அரசாங்கத்தின் மக்கள் நலனுக்கு விரோதமான செயற்பாடுகளுக்கு சிவில் சமூகம் பதிலளிக்கும் சந்தர்ப்பம் அதிகரித்துள்ளது. இது ஜனநாயகத்திற்கான மற்றுமொரு நல்ல சைகையாகும்.

**7. ஊடகத்துறைச் சுதந்திரம்**

இன்று பங்காளதேசத்தில் அரசாங்க வானொலி, அரசாங்கத் தொலைக் காட்சி தவிர்ந்த மற்றைய ஊடகங்களுக்கான சுதந்திரம் ஓரளவு வழங்கப் பட்டுள்ளது. இதனால் இவ்விடயம் ஜனநாயகத்தினை நிலை நாட்டுவதற்கான மற்றுமொரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

**8. அடிமட்டத்திலான கட்சிப் பிரச்சாரங்கள்**

தற்சமயம் அரசியல் கட்சிகள் எல்லாம் அரசியல் கலாச்சாரத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரச்சாரத்தினையே முன்னெடுப்பதுடன் மக்களுடைய உரிமைகள், அரசுக்கு அவர்கள் செய்ய வேண்டிய கடமைகள் என்பன பற்றியும் அவர்களுக்கு தெளிபுபடுத்துகின்றது. மேலும் பங்காளதேசத்தின் கிராமிய சமூக, பொருளாதார அபிவிருத்தியினை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றிய தெளிவினையும் வழங்க முற்படுகின்றது. இதன்படி பங்காளதேஷ் தேசியவாதக் கட்சி மற்றும் அவாமி லீக் கட்சி ஆகியவற்றின் அன்மைய பிரச்சாரங்கள் அடிமட்ட மக்களினை நோக்கித் திருப்பப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

**9. தனியார்மயப்படுத்தல்**

தனியார்மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்திய நீண்டகால அனுபவத்தினை பங்காளதேஷ் கொண்டுள்ளது. இந்நாட்டில் தனியார்மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமானது அந்நாடு சுதந்திரமடைந்த ஆரம்ப நாட்களிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதன்படி ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரிவுகள் தனியார்மயப் படுத்தப்பட்டுள்ளன. அரசியல் தன்மையில்லாத பொருளாதார தர்மத்தினை யொட்டிய தீர்மானங்கள் மேற்கொள்ளப் படுவதனை தனியார் மயப்படுத்தல் இயலுமானதாக்கும். இதன் மூலம் சிறந்த விளைவினை நோக்கி தனியார்மயப்படுத்தல் ஒரு நாட்டினை நகர்த்தக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலை ஜனநாயகத்திற்கான களநிலையினை ஏற்பத்திவிடக் கூடியதாகும்.

**10. அரசசார்பற்ற நிறுவனங்களின் வகிபாகம்**

பல அரசசார்பற்ற நிறுவனங்கள் பங்காளதேஷில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவ்வமைப் புக்களுள் பெரும் பாலானவை கிராமிய மக்களை ஒன்று திரட்டுதல், அவர்கள் மத்தியில் சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையினை முன்னேற்றுவதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் என்பவற்றை இலக்காகக் கொண்டு செயற்படுவதுடன் வெகுஜனக் கல்வி, சுகாதாரம், நுண்பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்கள் முதலியவற்றைக் கொண்டும் காணப்படுகின்றது. பங்காளதேசில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களுள் Grameen Bank, Proshika, BRAC, ASA, CARE முதலியன குறிப்பிடத் தக்கவைகளாகும்.இந்நிறுவனங்கள் ஜனநாயக விருத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும்

நடைமுறைப் படுத்தி வருகின்றமை குறிப்பிடத் தக்கவையாகும்.

## 11. பெண்கள் வலுவூட்டல்

பங்காளதேஷின் அரசியல் திட்டமானது பால்நிலைச் சமத்துவம், பால்நிலையினை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்களைத் தடுத்தல், சிலில் வாழ்க்கையின் சகல பரப்புக்களிலும் பெண்களுக்கான வாய்ப்பினை விரிபுபடுத்தல் என்பவற்றுக்கான விசேட பிரிவினைக் கொண்டுள்ளது. அவ்வாறே அரசியல் திட்டத்தின் படி உள்ளுராட்சி மன்றங்கள் பெண் உறுப்பினர்களையும் கொண்டிருக்க வேண்டும். அரசிலமைப்பின் 10வது உறுப்புரை தேசிய வாழ்க்கையின் சகல பரப்புக்களிலும் பெண்களின் பங்குபற்றுதலினை உறுதிப் படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறுகின்றது. உறுப்புரை 15 வீ பிரிவானது வேலை வாய்ப்பிற்கான உத்தரவாத உரிமையினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவ்வாறே பங்காளதேஷ் அரசியல் கட்சிகளும் தமது கட்சிகளில் பெண்களுக்கான இடத்தினை வழங்கியுள்ளது. இந்நாட்டில் அரசாங்க மற்றும் எதிர்கட்சிகளின் தலைவர்களாக இரு பெண்களே நீண்டகாலமாக இருந்து வருகின்றனர். கட்சிகளின் குழுக்கள் மற்றும் மற்றைய உறுப்புக்களில் பெண்கள் பிரதிநிதித்துவமானது குறிப்பிடத்தக்களவில் உள்ளதுடன் தேர்தல் அரசியலில் பெண்களின் பங்குபற்றுதலும் குறிப்பிடத்தக்களவில் உள்ளது.

## முடிவுரை

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து பல்வேறு நோக்குகளிலும் வேறுபட்ட வடிவங்களிலும் விளக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் ஜனநாயகமானது உலகின் எண்ணற்ற மக்களினால் நுகரப்படுவதாக உள்ளது. ஆனால் பங்காளதேஷ் மக்கள் இதனை அனுபவிப்பதில் இன்னும் தூரத்தில் நிற்கின்றனர். பங்காளதேசத்தில் ஜனநாயகத்தினை நிலை நாட்டுவதற்கு காணப்படும் சவால்களே அந்நாட்டு மக்களை ஜனநாயக அரசியல் கலாச்சாரத்திலிருந்து ஒதுக்கி வைத்துள்ளது. எனினும் ஜனநாயகத்திற்கான வாய்ப்பினை பங்காளதேஷ் இன்னும் இழந்துவிடவில்லை. இதற்கான முறையான திட்டங்களுடன் வெற்றிகரமான தந்திரோபாயங்களை அமுல் படுத்துவதன் ஊடாக பங்காளதேசத்தில் ஜனநாயகத்தினை மலரச் செய்ய முடியும். இதற்காக ஊடகங்கள், சிவில் சமூகம், சமூக, அரசியல் ஒழுங்கமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றன முன்னணிப் பங்கினை வகிக்க முடியும்.

## உசாத்துணைகள்:


1. Ahamad, B, 1993, **The Generals of Pakistan and Bangladesh**, New Delhi: Vikas Publishing Pvt. Ltd.
2. Ahmed, Moudud, 1995. **Democracy and the Challenge of Development**. Dhaka: UPL.
3. Awal Hossain, M.M. **Democracy in Bangladesh: Problems & Prospects**, at http://unpan1.un.org/intradoc/groups/public/documents/APCITY/UNPAN020003.pdf
4. Graig Baxter, et al., 1987, **Government and Politics in South Asia**, United States of America: Westview Press. pp 202 – 215, 277 – 283
5. Halim, M.A. 1998. **Constitution Constitutional Law and Politics: Bangladesh Perspective**. Dhaka: Rico Printers.
6. Kukreja, V., 2003, **Contemporary Pakistan: Political Process, Conflicts and Crisis**, London: SAGE Publications. pp 43 – 74, 258 – 290
7. V.A. Pai Panandiker, 2000, **Problems of Governance in South Asia**, New Delhi: Konark Publishers Pvt. Ltd. pp 201 – 228